**<u>நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்</u>**

**<u>முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,</u>**

**<u>நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்</u>**

**<u>2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் செவ்வாய்கிழமை</u>**

**சுருக்கு வழக்கு எண் (STC). 1928/2021**

**<u>CNR.No.TNDG03-014280-2021</u>**

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம், திண்டுக்கல்,
குற்ற எண்.824/2016
சட்டப்பிரிவுகள் 294(b), 323 IPC

... குற்ற முறையிடுபவர்

/எதிர்/

அபிராம் (வயது 32/2016),
த/பெ.நடராஜன்,
48/D பிளாக்,
ஹவுசிங் போர்டு,
பேருந்து நிலையம் அருகில்,
திண்டுக்கல். ... எதிரி

**<u>Case – Summary</u>**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Summary Trial Case (STC) No. 1928 of 2021 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police, Town North PS. Dindigul in Cr.No.824/2016 |
| 3. | Name of the accused | Abiram |
| 4. | Father’s Name | Nadarajan |

<table>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">48/D Block, Housing Board, Near Dindigul Bus stand, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">32/2016</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">17.07.2016 at about 11.00 Hrs.</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">17.07.2016<br>23.10.2021</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">Station Bail</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">-</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">08.04.2022</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 25.04.2022 the accused questioned on substance of accusation U/s. 294(b), 323 IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>06.05.2022</td><td>06.05.2022</td></tr>
<tr><td>PW2</td><td>06.05.2022</td><td>06.05.2022</td></tr>
<tr><td>PW3</td><td>06.07.2026</td><td>06.07.2026</td></tr>
<tr><td>PW4</td><td>06.07.2026</td><td>06.07.2026</td></tr>
<tr><td>PW5</td><td>13.07.2026</td><td>13.07.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused U/s. 313(1)(b) Cr.P.C</td><td colspan="3">20.07.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரிக்கு எதிரான இதச சட்டப்பிரிவுகள் 294(b), 323ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, எதிரியைக்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 23.10.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் சுருக்கு வழக்கு எண்.1928/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தியாகு, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>**தீர்ப்புரை**</u>

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

**1.** அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 17.07.2016ம் தேதி 11.00 மணிக்கு திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இவ்வழக்கின் வாதியான ஆரோக்கிய பாப்புலட் என்பவர் அலுவலகத்திற்கு

பக்கத்தில் இருந்தபோது, இவ்வழக்கின் எதிரி ஏற்கனவே இருக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக வாதியைப் பார்த்து அசிங்கமாக பேசி, கையால் அடித்து காயப்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323–IPC ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பால் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி, எதிரி முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 08.04.2022ம் தேதியன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 323–IPC ன் கீழான குற்றச்சாட்டை தமிழில் வாசித்து விளக்கிக்கூறி வினாவிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

3. அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 17.07.2016ம் தேதி தான் முறைப்பணி பார்த்துக்கொண்டு இருந்தபோது 11 மணிக்கு அபிராம் என்ற மதி என்பவர் அலுவலகத்திற்கு வந்து வலது கன்னத்தில் அடித்தார் என்றும், மேலும் தகாத வார்த்தைகளால் பேசினார் என்றும், அப்போது அங்கு பணியில் இருந்த துரைராஜ், சக்திவேல் ஆகியோர்கள் ஓடிவந்தவுடன் அபிராம் ஓடிவிட்டார் என்றும், இதற்கு முன்பு தனது மனைவி அவரது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது அபிராம் இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்ததாகவும், அப்போது தனது மனைவி அவரிடம் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கிறது ஏன் இவ்வளவு வேகமாக வருகிறீர்கள் என்று கேட்டதாகவும், அப்போது அபிராம் தனது மனைவியிடம் ஒருமையில் பேசி வாக்குவாதம் செய்ததாகவும், அப்போது தான் அவரை அடித்துவிட்டதாகவும், அதன்பின்பு ஒருநாள் என்னை அடிச்சுட்டீல உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கூறியதாகவும், அதற்கு தான் மன்னித்துக்கொள் என்று கூறியதாகவும், அதன்பின் அவர் தன் தங்கையின் மகனையும் அடித்துவிட்டார் என்றும், அதன்பின்பு தான் கூறிய 17.07.2016ம் தேதிய சம்பவம் நடைபெற்றது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், புகார் தான் எழுதியது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 17.07.2016ம் தேதி முறைப்பணி தானும், ஆரோக்கிய பாப்புலர் மற்றும் துரைராஜ் ஆகியோர்கள் பார்த்துக்கொண்டு இருந்தோம் என்றும், அப்போது திடீரென வந்த அந்த தம்பி ஆரோக்கிய பாப்புலரை அடித்துவிட்டார் என்றும், பின்பு அவரை ஆபாச வார்த்தைகளால் திட்டினார் என்றும், அதைப் பார்த்தவுடன் தாங்கள் இருவரும் அவரைத் தடுக்கச் சென்றபோது அவர் அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும், அங்கு வந்து அடித்த நபர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்று தனக்குத் தெரியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 17.07.2016ம் தேதியன்று அரசு மருத்துவமனையில் தான் பணியில் இருந்தபோது போலிசார் வந்து தன்னிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் கேட்டார்கள் என்றும், எதற்காக கையொப்பம் கேட்டார்கள் என்று தெரியாது என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும், படம் வரைந்தார்கள், அதில் தான் கையொப்பம் செய்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியடு செய்யப்பட்டுள்ளது.

7. மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 17.07.2016ம் தேதி தான் அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியில் இருந்தபோது போலிசார் வந்து படம் வரைந்து அதில்

தன்னிடம் சாட்சியாக இருக்கும்படி கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.அ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 17.07.2016ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, நிலைய பொறுப்பில் இருந்த சி.சா.ஆ. குமரவேல் திண்டுக்கல் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக உதவியாளர் ஆரோக்கிய பாப்புலெட் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் சின்னையா, சரவணப்பிள்ளை முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு சாட்சிகள் ஆரோக்கிய பாப்புலெட், சக்திவேல், துரைராஜ், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த குமரவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், நிலையத்தில் ஆஜரான எதிரியைக் காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன் என்றும், பின்பு தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**IV.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்**

9. அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து

எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களைப் பற்றி எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் 20.07.2026ம் தேதியன்று தொகுத்தளித்து வினவியபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பில் பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் கூறினார். தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என்று கூறினார்.

10. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**V. வாதுரைகள்:**

**1. அரசுத்தரப்பு வாதம்:**

11. இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், ஆவணங்களின் அடிப்படையிலும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளதால், எதிரியின் மீதான இதச பிரிவுகள் 294(b), 323ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**2. எதிரி தரப்பு வாதம்:**

12. இதற்கு மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதுரையில் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட

குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரி மீது தவறாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், புகார்தாரர் அரசு பணியில் இருந்தார் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை**

13. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும், வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:–**

14. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 17.07.2016ம் தேதி 11.00 மணிக்கு திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இவ்வழக்கின் வாதியான ஆரோக்கிய பாப்புலட் என்பவர் அலுவலகத்திற்கு பக்கத்தில் இருந்தபோது, இவ்வழக்கின் எதிரி ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக வாதியைப் பார்த்து அசிங்கமாக பேசி, கையால்

அடித்து காயப்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 323–IPC ன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

15. மேற்சொன்ன குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, அதில் "இன்று 17.07.2016ம் தேதி சுமார் 11.00 மணிக்கு திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையிலுள்ள நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, அங்கு நான் குடியிருக்கும் பஸ் நிலைய குடியிருப்பில் குடியிருந்த நடராஜன் மகன் அபிராம் என்ற மதி என்ற நபர் என் அருகில் வந்து தகாத வார்த்தைகளால் பேசி, சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் கையால் என் கன்னத்தில் அடித்துவிட்டார்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போதும், மேற்சொன்ன சங்கதிகள் இடம்பெற்றுள்ளன.

16. மேலும், இவ்வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது முதல் விசாரணையில், "கடந்த 17.07.2016ம் தேதி நான் முறைப்பணி பார்த்துக்கொண்டு இருந்தபோது 11 மணிக்கு அபிராம் என்ற மதி என்பவர் அலுவலகத்திற்கு வந்து வலது கழுத்தில் அடித்தார். மேலும் தகாத வார்த்தைகளால் பேசினார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது முதல் விசாரணையில், "கடந்த 17.07.2016ம் தேதி முறைப்பணி நானும், ஆரோக்கிய பாப்புலர் மற்றும் துரைராஜ் ஆகியோர்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது திடீரென வந்த அந்த தம்பி

ஆரோக்கிய பாப்புலரை அடித்துவிட்டார். பின்பு அவரை ஆபாச வார்த்தைகளால் திட்டினார். அதைப் பார்த்தவுடன் நாங்கள் இருவரும் அவரைத் தடுக்கச் சென்றோம். அவர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி சம்பவயிட சாட்சிகள் இருவரும் எதிரி ஆபாசமான வார்தைகளால் திட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளபோதும், எதிரி என்னென்ன வார்த்தைகளை பயன்படுத்தினார் என்றோ, அதனால் தனக்கோ அல்லது பிறருக்கோ அவமானமோ, அருவருப்போ ஏற்பட்டதாக குறிப்பிட்டு எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 ஆன புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், "கேட் முன்பு காவலாளி இருப்பார்கள் என்றால் எப்பொழுதும் இருப்பார்கள் ஆனால், சம்பவத்தன்று அங்கு இல்லை" என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "இருசக்கர வாகனத்தைப் பார்த்துக் கொள்வதற்காக அங்கு 2 நபர்கள் எப்பொழுதும் இருப்பார்கள் என்றால், சரிதான். சம்பவத்தன்று கேட் முன்பு செக்யூரிட்டி இருந்தார்கள் என்றால், சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது, சம்பவயிடம் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்று தெரிய வருகிறது. அவ்வாறு இருக்கையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வேறு தனிநபர் சாட்சிகளையோ அல்லது பொதுமக்களையோ சாட்சியாக முன்னிலைப்படுத்தி அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது முதல்

விசாரணையில், "அங்கு வந்து அடித்த நபர் தற்போது நீதிமன்றத்திற்கு வந்திருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை" என்று சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, எதிரியை அடையாளப்படுத்தி உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

17. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில், சாட்சிகள் சின்னையா, சரவணப்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளபோது, பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர் தங்களது குறுக்கு விசாரணையில், "மேற்படி கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளபோது, அரசு தரப்பு வழக்கின் மீது இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

18. ஆகவே, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எதிரியின் மீதான குற்றச்சாட்டை உறுதியூட்டும் வகையில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி, எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. முடிவாக, எதிரிக்கு எதிரான இதச சட்டப்பிரிவுகள் 294(b), 323ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு

இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, எதிரியைக் குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

20. இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்துக்கள் பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

21. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக இரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.11 13:22:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | ஆரோக்கியபாப்புலர் த/பெ.இருதயசாமி | 06.05.2022 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | சக்திவேல் த/பெ. பழனி | 06.05.2022 | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | அ.சா.3 | சின்னையா த/பெ.செல்லமுத்து | 06.07.2026 | அ.சா.ஆ.2 |
| 4. | அ.சா.4 | சரவணன் த/பெ.முனியாண்டி | 06.07.2026 | அ.சா.ஆ.3 |
| 5. | அ.சா.5 | முத்துக்குமார் (காவல் ஆய்வாளர்) | 13.07.2026 | – |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 17.07.2016 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.3 | 17.07.2016 | பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 17.07.2016 | பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.08.11 13:22:57 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. வழக்கின் முடிவு எதிரிக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.